DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-134/2021

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முனியாண்டி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

19.05.2026 – 12.40 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் கூரான்கோட்டை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மைத்துனர். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த வித முன்விரோதமும் கிடையாது. கடந்த 5, 6 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு நாள் காலை 10.00 மணியளவில் நான் கூரான் கோட்டையில் உள்ள குடிதண்ணீர் பைப் அருகே தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த போது தெருவில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் யாரோ என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை. பின்னர் சாயல்கடி போலீசாரிடம் சொன்ன போது போலீசார் வந்து என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி</u>:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன்

அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**</u>

கடந்த 03.08.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் கூரான் கோட்டை அருகில் உள்ள குடிதண்ணீர்பைப் அருகில் எதிரி என்னை ஆபாசமாக பேசி காலால்ஓங்கி மிதித்து கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அது குறித்து புகார் அளித்ததாகவும், போலீசார் விசாரித்தபோது கூறிவிட்டு எதிரி உறவினர் என்பதால் எதிரியுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி